அனுப்புநர்
டாக்டர்.க.விஜயகார்த்திகேயன்.,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
திருப்பூர்.

பெறுநர்
1. முதல்வர், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை , திருப்பூர்.
2. இணை இயக்குநர், மருத்துவப்பணிகள், திருப்பூர்.
3. துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், திருப்பூர்.
4. ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி.
5. நகர் நல அலுவலர், திருப்பூர் மாநகராட்சி
6. மண்டல இயக்குநர் (நகராட்சி நிர்வாகம்), திருப்பூர்.
7. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருப்பூர்.
8. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), திருப்பூர்.

அய்யா / அம்மையீர்,

**ந.க. 3546/2020/ஈ4** **நாள்: 31.05.2021**

பொருள்: பேரிடர் மேலாண்மை - திருப்பூர் மாவட்டம் - COVID -19 கொரோனா வைரஸ் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் - கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரை அடக்க செய்தல் - மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற அமைப்பு உயிரிழந்தோரை அடக்க செய்ய முன் வந்துள்ளது - தொடர்பாக.

பார்வை:
1. மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற அமைப்பின் கட்செவி நாள்: 30.05.2021.
2. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொ) அறிவுரை, நாள் : 31.05.21.

----------

கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வண்ணம் தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரை அடக்கம் செய்ய இறந்த நபரின் சொந்த பகுதிக்கு இறந்தவரின் உடலை கொண்டு செல்வதில் அரசு இலவச அமரர் ஊர்திகள் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறு இறந்தவரின் உடலை கொண்டு செல்வதில் அரசு இலவச அமரர் ஊர்திகள் கிடைக்கப்பெறாத பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி தனியார் ஊர்திகள் மூலம் இறந்தவரின் உடலை கொண்டு செல்வதனால் தங்களின் பணத்தினை செலுத்தும் நிலைக்கு ஆளாகின்றனர்.

2) மேற்படி சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படியும், விரைந்தும், சேவை மனப்பான்மையுடன் எவ்வித கட்டணமின்றி

மோக்ஷா துவாரா டிரஸ்ட் (9789888713) என்ற தனியார் தொண்டு நிறுவனம் நல்லடக்கம் செய்வதற்காக இறந்தவர்களின் உடல்களை சம்பந்தப்பட்ட மின்மயானத்திற்கோ / இடுகாட்டிற்கோ கொண்டு செல்வதற்காக தனது சொந்த செலவில் போக்குவரத்து வசதியினை செய்து வருகின்றது. மேற்கண்ட தொண்டு நிறுவனம் திருப்பூர் மாவட்டத்திலும் கொரோனா தொற்றினால் உயிரிழந்த ஏழை எளிய மக்களின் உடல்களை எவ்வித கட்டணமின்றி நல்லடக்கம் செய்யுமிடத்திற்கு தனது சொந்த பொறுப்பில் கொண்டு வரும் பணியினை செய்ய முன்வந்துள்ளது. எனவே திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், நகர்ப்புற சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்,கோவிட் சிறப்பு சிகிச்சை மையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் நோயாளிகளின் உடல்களை சம்பந்தப்பட்ட நோயாளிகளை அடக்கம் செய்யும் இடத்திற்கு கொண்டு செல்ல மேற்கண்ட மோக்ஷா துவாரா டிரஸ்ட் என்ற தனியார் தொண்டு நிறுவனத்தின் சேவையினை பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

31/05/2021

மாவட்ட ஆட்சியருக்காக/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது),
திருப்பூர்.

நகல்:

1. சார் ஆட்சியர் , தாராபுரம்,
2. வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் / உடுமலைப்பேட்டை.
3. அனைத்து வட்டாட்சியர்கள், திருப்பூர் மாவட்டம்
4. மோக்ஷா துவாரா டிரஸ்ட்,
   5/137பி, VS நகர், தங்கம் அவன்யூ அனக்ஸ்,
   சிக்கராயபுரம், கோவூர் EB,
   சென்னை-28.